ஸ்ரீலஸ்ரீ சத்குரு பழனி



நாச்சிமுத்து

சிவநாராயண தேசிகர் வரலாறு


ஸ்ரீலஸ்ரீசத்குரு பழனி
நாச்சிமுத்து சிவநாராயண தேசிகர் சுவாமி

ஆயர்குல சித்தர் பெருமான்

ஸ்ரீலஸ்ரீ நாச்சிமுத்து சுவாமிகள் என்னும் சிவநாராயண தேசிகர்

பழநி யாதவான் மடாதிபதி

ஸ்ரீலஸ்ரீ நாச்சிமுத்து ஸ்வாமிகள் என்னும் சிவ நாராயண தேசிகர்

A. கோபாலகிருஷ்ணன் (வணிகவரி அதிகாரி திருச்சி.)

இம்மகான் தற்காலம் மலையாள நாட்டில் இருக்கும் பாலக்காட்டில் யாதவ குலத்தில் பிறந்தவர். பிறந்த நாள் 1823ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் அஸ்வினி. திருசாமிப்புலவர் என்ற பெருந்தகைக்கும் பூரனேஸ்வரி அம்மையார்க்கும் மகவாய் பிறந்தார்கள். திருமந்திரம்யாத்த ஸ்ரீ திருமூல நாயனாரில் வழித்தோன்றல் எனக்கூறுவாருமுளர். ஸ்ரீலஸ்ரீ நாச்சி முத்து ஸ்வாமிகள் நல்ல அழகன். தமிழ், சமஸ்கிருதம், மலையாளம் இவற்றில் நல்ல, ஆழ்ந்த கல்வி கற்றவர். சங்கீதம், பரதநாட்டியம் நாடகம் இவற்றில் அதிகமான பற்றுக் கொண்டவர். பத்தொன்பதாவது வயதில் திருமணம். பெண்ணும் பாலக்காடுதான்.

சந்நியாசம் கொள்வதற்கு முன் நாச்சிமுத்து என்பது அவர்கள் பெயர். பாலக்காடு, வைநாடு, கன்னிக்கோட்டை, திருச்சூர் போன்ற இடங்களில் வனங்களை ஏலத்தில் எடுத்து யானைகளை அமர்த்தி பெரிய அளவில் மர வியாபாரம் செய்து வந்தார்கள்.

இவருக்கு இரண்டு ஆண் மக்கள். மூத்தவர் பெயர் தனுஷ்கோடி இராமலிங்கம். அடுத்தவர் பெயர் சேது மாதவ செல்வக்குமாரர். பெண் மக்கள் இல்லை. இரண்டாவது பையனுக்கு வயது ஆறுமாதம், கைக்குழந்தை. ஸ்வாமிகளுக்கு வயது இருபத்தி நான்கு. சுவாமி சன்யாசம் பெரும்போது சந்தியாசம் கொண்ட அன்றே பாலக்காட்டிலிருந்து நடந்து பழநியை வந்தடைந்தார். முருகனிடத்தில் அத்தியந்த பக்தி கொண்டார்கள். சில நாட்களுக்குப் பின் தவத்தில் ஈடுபட்டார்கள். பழநி அடிவாரத்தில் முள் புதர்களுக்கிடையில் ஒரு பெரிய புளியமரம், புளியமரத்தை அடைந்து யோக நித்திரையில் அமர்ந்தார்கள். பல நாட்கள் தவத்தின் பயனாய் மெய் ஞானம் கிடைக்கப் பெற்றார். எந்த மரத்தினடியில் சித்தியடைந்தார்களோ அதே மரத்தை நடுவில் நிறுத்தி பழநி யாதவான் மடாலயத்தை நிறுவினார்கள். பழநி அடிவாரத்தில் முதன் முதலாக நிறுவிய மடாலயம் இதுவே.

இவர்கள் ஏற்படுத்திய நிறுவனங்கள் பல. குறிப்பாக பழநியில் உள்ள மடாலயம், அடிவாரத்திலுள்ள மடாலயம். மதுரை வடக்கு மாசி வீதியில் இருக்கின்ற ஸ்ரீ

Srilasri Satguru Palani NatchiMuthu SivaNarayana Desikar varalaru

Book created by

Shribalasubiksham Ramasubramanian

நவநீத கிருஷ்ணன் கோவில், கோயமுத்தூரை அடுத்த பேரூரிலும் மேலூரை அடுத்த கொட்டாம் பட்டியிலும் நிறுவனங்கள் உள்ளன. பழநி முருகனைத் தரிசிக்க பக்தர்கள் மலையில் யானைப் பாதை வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. அதை மாற்றிப் புதிதாக படிகள் கட்டி வைக்கும் பணியைத் துவக்கி வைத்தார்கள். இன்று நடைபெற்று வரும் கார்த்திகை விழா முறைகள் ஸ்வாமிகளால் ஏற்படுத்தப்பட்டவை. முருகனுக்குத் தங்கத்தால் மயில் வாகனம், வைரத்தில் கிரீடம், முத்தால் செய்த அங்கி ஆகிய விலை மதிக்க முடியாத பல செல்வங்களை முருகனுக்கு அளித்தார்கள். சான்று சுவாமிகளின் போற்றிபாவில் வரும் சில அடிகள்

> சந்திர புஷ்கரணி நந்த வனமும் வைத்தாய்
> தவித்து வரும் தாகவிடாய் தணிக்கத் தண்ணீர்
> பந்தலிட்டாய் பல மடங்கள் கட்டி வைத்தாய்
> பார்மன்னர் வெகு மதிக்கப் பரிசு பெற்றாய்
> கந்தனுக்குக் கார்த்திதைக முத்தங்கி சேவை
> கருணையுடன் கன பூசை நடக்க வைத்தாய்
> தந்திர மந்திர சுகுண நாச்சிமுத்துச்
> சற்குருவே நின் கமல சரணம் போற்றி

தங்க மயில் வாகனம்

முருகனுக்குத் தங்கத்தில் மயில் வாகனம் செய்ய வேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொண்டார்கள், ஸ்வாமிகள். இதற்குப் பெரும் தொகை தேவை. இதற்காக முதன் முறையாகப் பணம் பெறுவது நல்லவர்கள் இடத்தில்தான் இருக்க வேண்டும் என நிர்ணயித்தார்கள். பழநித் தாலுக்காவில் ஆயக்குடி என்று ஒரு கிராமம் இருக்கின்றது. இது ஆயர்குடி, நாளடைவில் ஆயக்குடி என்று ஆகிவிட்டது. இந்தத் தாலுகாவில் ஒரே ஒரு யாதவர் குடும்பம் தான் பல நூற்றாண்டுகளாக ஆயக்குடியில் இருந்து வருகிறது. ஸ்வாமிகள் காலத்தில் திரு குமாரசாமி மணியகாரர் என்ற ஒரு பெரு நிலக்கிழார் வாழ்ந்து வந்தார். நேர்மையிலும், தான தர்மங்களாலும், ஒழுக்கத்தாலும் மேன்மையடைந்தவர்.

> "மருக்கமழும் குழல் மடவார் தங்களுக்கோர் மகுடமெனும் அழகு பூண்ட
> திருவலவும் அழக்கப்ப மால்சன்ற குமாரசாமி தீரா தர்ம
> தருக்குநிகரான கரமேனு யென் பசிதனைத் தள்ளித் தயவாயிப்பாரில்
> பெருக்கமுடன் வாழ்ந்திடுவாய் அதிக தர்மப் பிரபலோனே"

மணியகாரர் அவர்களும் ஸ்வாமியவர்களும் நட்பாலும், உறவாலும் நெருங்கியவர்கள். எனவே இந்த நற்பணியை மணியகாரர் அவர்களால்தான் துவக்கி வைக்க

வேண்டும் என்று ஸ்வாமிகள் முடிவு செய்தார்கள். மணியகாரரை அணுகி விவரத்தைச் சொன்னார்கள். மணியகாரர் அவர்களும் மனமுவந்து (400) நானூறு பவுன்கள் அன்பளிப்பாகச் செய்தார்கள். காரியம் முற்றுப் பெற்றது.

ஸ்வாமிகள் தன் வசம் ஒரு நல்ல மரகதம் (பச்சைக்கல்) வைத்திருந்தார்கள். இதை முருகனின் தங்க மயிலுக்குக் கண்ணாக அமைக்க ஆசைப்பட்டார்கள். ஆனால் சமமான இன்னும் ஒரு மரகதம் தேவை. இரண்டு கண்கள் அல்லவா! யோசித்தார்கள், விவரம் கிடைத்தது. கள்ளிக்கோட்டை சாமோரின் மகாராஜா வீட்டில் கணக்கிற்கு வராமல் ஒரு மரகதம் இருந்தது. உடனே தனது பரிவாரங்களுடன் பல்லக்கில் கள்ளிக்கோட்டை சென்று மகாராஜா படி, கட்டணம் வகையரு செலுத்தி எதிர்கொண்டு வரவேற்க ஸ்வாமிகள் அரண்மனைக்கு விஜயம் செய்தார்கள். தனது நோக்கத்தை மகாராஜாவிடம் எடுத்துரைத்தார்கள். உடனே மன்னனும் கொண்டு வர உத்தரவிட்டார். ஆனால் காணப் பெறவில்லை. கஜானா இருப்பு ஏட்டிலும் இல்லை. விவரம் ஸ்வாமிகளுக்குத் தெரியப்படுத்தினர். ஸ்வாமிகள் விடவில்லை. இன்ன இரும்புப் பெட்டகத்தில் இன்ன மூலையில் அழுக்குடன் ஒரு பொருள் இருக்கிறது. அதை எடுத்து வாரும் எனக் கூறினார். அவ்வாறே சென்று அலசிப் பார்த்தனர், கண்டு பிடித்தனர். கொண்டு வந்து ஸ்வாமி மூன் வைத்தனர். சுத்தப்படுத்திப் பார்த்தால் ஸ்வாமிகள் வசத்தில் இருக்கும் மரகத்தைப் போலவே இணையாக, அழகாக இருந்தது. மன்னனுக்கு மரகதத்தின் மேல் ஆசை ஏற்பட்டது. ஸ்வாமிகள் சொன்னார்கள் :—

''மன்னா நான் தமிழ்நாட்டை விட்டுக் கள்ளிக்கோட்டை வந்து உன்னைச் சந்தித்தது வெறும் காரியமல்ல, ஒரு புனிதமான காரியம். பழநி முருகனின் தங்க மயில் வாகனத்திற்கு இரண்டு கண்கள் நல்ல மரகதமாக இருக்க வேண்டும். ஒன்று என் கைவசமுள்ளது. மற்றொன்று உன்னிடம் உள்ளது. அதுவும் கிடைத்தால் காரியம் நிறைவேறும். ஆகவே மன்னன் மனமுவந்து என்னிடம் தரவேண்டும். அப்படி விரும்பிச் செய்யாவிடில் இதோ என்னிடமுள்ள மரகதத்தையும் நீயே இனாமாக வைத்துக் கொள்ளும்'' என்றனர். மன்னன் மனம் மாறி ஸ்வாமிகளின் இஷ்டப்படி மரகதமும் இறை பணிக்குப் பெரும் பொருளும் கொடுத்து கண்ணியப்படுத்தி அனுப்பி வைத்தார். பழநியிலும்,, அடிவாரத்திலும் உள்ள தேர், ரதங்கள், ஸ்வாமிகளால் செய்யப் பெற்றவை. கொல்லங்கோடு மகாராஜாவிற்குக் குடும்பத்தில் ஏற்பட்ட இன்னல்களைத் தீர்த்து வைத்ததால் ஸ்வாமிகளுக்குப் பாத்காணிக்கையாகக் கொடுத்த மரங்களைக் கொண்டு இந்தத் தேர்களைச் செய்து விளம்பரமின்றி இறைவனுக்கு அர்ப்பணம் செய்தார்கள். இது போன்ற காரியங்களைக் கொண்டு ''பார் மன்னர் வெகு மதிக்கப் பரிசு பெற்றாய்'' என்கிறார் பக்தர்.

சித்துகள் பல

பிறவிக்குருடர்களுக்குக் கண் பார்வையளித்தார்கள். முடவனுக்கு, நடக்கும் கால்கள் தந்து எல்லோரைப் போல் பணிபுரியும் ஆற்றலைக் கொடுத்தார்கள்.

பிறவியில் ஊமையனாக இருந்தவனைப் பேசவைத்துப் படிக்க வைத்துப் புலவனாக ஆக்கினார்கள். அப்புலவருக்கு "செங்கோடன்" என்று பெயர். தன் வாழ்நாள் முழுவதும் ஸ்வாமிகளுக்குத் தொண்டு செய்தார்.

ஸ்வாமிகள் நிறுவிய அறநிலையங்கள் பல. காசி முதல் கன்னியாகுமரி வரையுள்ள சகல வகுப்பு யாதவர்களும் ஒன்று படவேண்டும் என்று நூற ஆண்டுகளுக்கு முன் பெருமுயற்சியில் ஈடுபட்டார்கள். அந்தப் பெரு நோக்கின் அடிப்படையாக யாதவான் மடாலயத்தை நிறுவினார்கள். தாது வருடப்பஞ்ச காலத்தில் தனியாக ஷெட்டுகள் போட்டு பஞ்சம் தீரும் வரை பழநியில் அன்னதானம் செய்தார்கள்.

நம் யாதவரிடத்தில் ஒற்றுமையில்லாத காரணத்தாலும், குறிப்பாக மதுரை நகர் வாசிகளில் உள்ள சில சுயநலப் பேராசைக்காரர்களால் ஸ்வாமிகள் நிறுவிய ஆதீனம் சிதைவுற்றது. அறநிலையங்கள் சீர்கெட்டன. சொத்துக்கள் பராதீனம் ஆயின. அறநிலையச் சொத்துக்களின் மதிப்பு பல லட்சம் ரூபாய் ஆகும். ஒரு சிறு உதாரணத்தால் சொத்தின் விபரம் விளங்கும். ஸ்வாமிகள் காலத்தில் அடிவாரம் யாதவான் மடத்தில் கூட்டிப்பெருக்கி வருவருவதற்கு ஒரு பண்டாரத்தை நியமித்தார்கள். அவர் பெயர் கருப்பண பண்டாரம். ஸ்வாமிகளின் காலத்திற்குப்பின் நிர்வாகத்தில் சிக்கல் ஏற்பட்டது. யாதல்ர்களிடையில் ஒற்றுமையில்லை. எனவே பண்டாரத்திற்கு வாய்ப்பு அதிகமாயிற்று. இனத்தவர்களை ஒன்று சேர விடாமல் சிக்கல்களை ஏற்படுத்தினார். ஆதீன சொத்துக்களைச் சுரண்டினார். பல பூமிகளுக்கு கிஸ்தி போடாமல் விட்டு கிஸ்திக்காக ஏலத்தில் விட்டுத் தான் எடுத்துக் கொண்டார். இந்த வகையில் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் ஆஸ்தியை உண்டாக்கிக் கொண்டார். மகன் பி.இ. பட்டம் பெற்றான். யாதவப் பெருங்குடி மக்களிடம் ஒற்றுமை இல்லாமலும், விட்டுக் கொடுக்கும் மனம் இல்லாத காரணத்தாலும் இந்த விளைவுகள், யார் யாரோ நம்மை வைத்து முன்னேறுகிறார்கள். இந்த ஆதீனத்தை உயிர்ப்பிக்க, சொத்துக்களை சமூகத்திற்குப் பயன்படுத்த தமிழ்நாடு ஸ்ரீ யதுகுல மகாசபை முன் வரவேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ணன் பிரதிஷ்டையும் இறுதி யாத்திரையும்

மதுரை யாதவர்கள் வீதியாகிய வடக்கு மாசி வீதியில் ஸ்வாமிகளின் முயற்சியால் கட்டப் பெற்றது, ஸ்ரீ நவநீதி கிருஷ்ணன் கோவில். ஸ்ரீ கிருஷ்ணனை ஸ்தாபிதம் செய்ய வேண்டும் என்று ஸ்வாமிகள் பழநியை விட்டுப் புறப்பட்டு மதுரை வந்தடைந்தார்கள். குறிப்பிட்ட நாளன்று ஸ்வாமிகள் கோவிலுக்கு வந்து மண்டபத்தில் இருந்து கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனை எடுத்து ஸ்தாபிக்க உத்திரவிட்டார்கள். யாக கிருத்தியங்கள், வேத பாராயணங்கள் முழங்கின. ஸ்தபதியுடன் எட்டுப்பேர்கள் சேர்ந்து ஸ்ரீ கிருஷ்ணனைத் தூக்கினார்கள். கிருஷ்ணன் எழும்பவில்லை. முரட்டுத்தனமாகத் தூக்கினால் விக்கிரகத்திற்குப் பின்னம் ஏற்படும் எனக்கருதி ஸ்தபதியவர்கள் ஸ்வாமிகளிடம் வந்து "நாங்கள் எட்டுப் பேர்கள் சேர்ந்து தூக்கினோம்.

ஆனால் கிருஷ்ணன் எழும்ப மாட்டேன் என்கிறார்'' என்று முறையிட்டார். உடனே ஸ்வாமிகள் தொந்தி குலுங்க வாய்விட்டுச் சிரித்து ''ஓகோ கிருஷ்ணனுக்கு இந்தப் பரதேசி மேல் ஆசை வந்து விட்டது அப்படியே ஆகட்டும்'' என்றனர். ஆசனத்தை விட்டெழுந்து கிருஷ்ணனிடம் சென்று ஸ்தபதி ஒருபுறமும் தான் ஒருபுறமும் பிடித்தார்கள். கிருஷ்ணபரமாத்மா எழுந்தருளினார். ஸ்தாபிதம் நடந்தது. ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்வாமிகளை ஏற்றுக் கொண்டார். சரீரத்தை அடக்கம் செய்யத்திட்டமிட்டார்கள். மதுரை வைகை நதிக்கரையில் புட்டுத்தோப்பு என்ற இடம் இருக்கிறது. இந்த இடத்தில் மதுரை ஈசன் சொக்கநாதர் பிட்டிற்கு மண்சுமந்து பாண்டியன் கைப்பிரம்பால் அடிபட்டார். அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து தன் பார்வையில் சமாதுக்குழி, உள் கட்டிடம் முதலியவற்றை முடித்தார்கள். இவ்வேலை முடிந்ததும் தான் முகாமிட்டிருக்கும் மதுரை வடக்குமாசி வீதியிலுள்ள இராமாயணச் சாவடிக்குச் சென்றனர். 1909ம் ஆண்டு சித்திரைத் திங்கள் மதுரை மீனாக்ஷிக்கும் சொக்கநாதருக்கும் நடக்கும் திருமணநாள். திருக்கல்யாண உற்சவநாள். பெருவிழா. அன்று இரவு இராமாயணச்சாவடியில் ''ஆசனமிட்டு நாற்புறமும் காவி வஸ்திரத்தால் திரையிட்டு சின்முத்திரை கொண்டு பத்மாசனத்தில் அமர்ந்தார்கள். காலை 5 மணிக்கு ஸ்வாமிகள் குளிப்பது வழக்கம். முறைப்படி பணியாள் போய்ப் பார்த்தார். ஸ்வாமிகள் நிஷ்டையில் இருந்தார்கள், நேரமாயிற்று. சந்தேகப்பட்டுத் திரையை நீக்கிப்பார்த்தால் சரீரம் மட்டும் இருக்கின்றது. ஆன்மா ஸ்ரீ நவநீதகிருஷ்ணனிடம் ஐக்யமாகி விட்டது. நவநீத கிருஷ்ணனை வணங்கினால் இருவரை வணங்கிய பாக்கியம் கிடைக்கும். சரீரத்தை எடுத்துச்சென்று புட்டுத்தோப்பில நிர்மாணிக்கப் பெற்ற நிறுவனத்தில் அடக்கம் செய்யப் பெற்றார். அங்கும் ஒரு கோயில் கட்டி சமாதியின் மேல் சிவலிங்கத்தை ஸ்தாபிதம் செய்து ஒரு பக்கம் சுப்ரமணியரும் மற்றொரு பக்கம் கணேசரும் இருக்கிறார்கள் ஸ்வாமிகளுக்கு நித்திய பூஜை நடந்து வருகிறது பழநிச்சாமி கோயில் என்று வழங்கி வருகிறது. 'தீராத வெம்பிணிகள் எல்லாம் தீரும்'' இடம், மனக்கவலை நீங்கப்பெறும் இடம். ஸ்வாமிகளைப் பற்றி அண்மையில் ஆவி உலகத்தாரால் சொன்ன வார்த்தைகள் ஸ்ரீலஸ்ரீ நாச்சிமுத்து ஸ்வாமிகள் சிங்கார சிவகுரு. சிவகுமாரரின் செல்வம். (முருகனின் சொத்து) அமரர் உறவு (இறவாத்தன்மை) வாடிய பேருக்கு வான் மழை. தேடிய பேருக்கு நாகரத்தினம். கூடிய பேருக்குக் குமரர் அருள் கூட்டும் இமயத்துச் செல்வம், அண்டினார் அறிந்தார் அமைதி பெறுவர்''.

ஸ்ரீலஸ்ரீ நாச்சிமுத்து ஸ்வாமிகளின் பொற்பாதங்களே சரணம். வாழ்க மெய்யடியார்கள், வாழ்க மெய்யன்பர்கள்.

-O-O-

அருள்மிகு ஸ்ரீ நாச்சிமுத்து சுவாமி
திருக்கோவில் கும்பாபிஷேக சிறப்புமலர்

1 - 2 - 1998 ஞாயிற்றுக்கிழமை

சரணம் - 108

காப்பு

வேழ முகத்து விநாயக ! நானுனைத்
தாழ்ந்து பணிந்தே தமிழ்கேட்டேன் - ஆழமிகு
ஞானம் மிகுந்தோங்கு நாச்சிமுத்து நல்லாரைத்
தேன்தமிழில் பாட தெளிந்து !

கவிதை ஆக்கம்
அதலை இராமன்
மதுரை.

சரணம் சொல்ல ஏற்படும் பலன்கள்

பாலக்காட் டிடை வாழ்ந்து பழனி வந்தே
பாருள்ள யாதவர்க்கு மடம மைத்தே
சீலமுடன் ஞானநிலை பெற்றே எய்தி
சிறந்தோங்கு மாசி வீதி தனிலு றைந்து
கோலமிகு நவநீதக் கிருஷ்ணன் கோவில்
கொலுவிருக்கும் சிலையதனைப் பீடந் தன்னில்
சால்புறவே பிரதிஷ்டை செய்த போதே
சமாதிநிலை யடைந்திட்டார்; நாச்சிமுத்து!
காலை மாலை இருவேளை கனிந்தே அன்னார்
கழலடியைப் போற்றியுமே சரணம் சொல்ல
வேலையிலே முன்னேற்றம் வெகுவாய்க் கூடும்;
வேண்டுவன கைகூடி விரைவில் கிட்டும்!
வேலொத்த கூர்மை மிகு அறிவுங் கூடும்;
வீண் கவலை நமைவிட்டுப் பறந்தே ஓடும்!
ஆல் போலே நம் வாழ்வு தழைத்தே ஓங்கும்;
அருகு போலே வேரூன்றி அமைதி தேங்கும்!

சரணம் - 108

1. புட்டுத் தோப்பில் உறைவோய் சரணம்
புனித ஞானப் பொற்பே சரணம்
பட்டு மேனிப் பகலவ சரணம்
பண்பு குன்றாப் பதியே சரணம்
வட்ட நிலவின் வனப்பே சரணம்
வான வில்லின் அழகே சரணம்
கிட்ணன் பதம்பணி கேசவ சரணம்
கீர்த்தி நாச்சி முத்தே சரணம்!

2. பூத்திடு நகையின் பொலிவே சரணம்
புன்மை போக்கும் புனிதா சரணம்
நாத்திடு நஞ்சை நலமே சரணம்
நல்லறம் உரைக்கும் நாயக சரணம்
ஊத்தெழும் தூய உண் நீர் சரணம்
உவட்டா ஆன்ம உரையே சரணம்
காத்திடு கண்ணன் கழலே சரணம்
கருணை நாச்சி முத்தே சரணம்!

3. முல்லை மலரின் முகிழ்ப்பே சரணம்
மூவா மருந்தனை மூர்த்தி சரணம்
தொலலை போக்கும் துயா சரணம்
தோன்றாத் துணையனை துணிவே சரணம
பொல்லாத் தீவினை போக்குவோய் சரணம்
பூத்த தும்பைப் பூவே சரணம்
நல்லார் ஏத்தும் நடுவே சரணம்
நாச்சி முத்து நாயக சரணம்!

4. அருமறை யுரைக்கும் ஆசான் சரணம்
   அகவிருள் போக்கும் ஆதவ சரணம்
இருவினை கலையும் ஈர்ப்பே சரணம்
   இறைநிலை காட்டும் இயல்பே சரணம்
தருநிழல் ஒத்த தகையே சரணம்
   தாங்கி வளர்க்கும் சால்பே சரணம்
பெருமை யோங்கு பேறே சரணம்
   பழனிச் சாமிப் பெருந்தகை சரணம் !

5. தீங்கரும் பனைய தேவே சரணம்
   தெளிந்த ஞானத் தெளிவே சரணம்
மாங்கனி யொத்த மனத்தோய் சரணம்
   மதிநல மிக்க மாண்பே சரணம்
வீங்கிள நீரின் சுவையே சரணம்
   வீசும் தென்றல் காற்றே சரணம்
பூங்குயில் இசையின் பாட்டே சரணம்
   பழனிச் சாமி குருவே சரணம் !

6. ஓமெனும் மந்திர உயிர்ப்பே சரணம்
   உள்ளம் மலரும் உரையோய் சரணம்
பூமணச் சோலை புனிதா சரணம்
   பூவிதழ் நகையின் பொலிவே சரணம்
தேமாங் கனியே திருவே சரணம்
   தெய்வ நிலையுறு தேவே சரணம்
பாமணம் வீசும் பாங்கே சரணம்
   பழனிச் சாமிப் பெருந்தகை சரணம் !

7 யாதவ குலம் மகிழ் சான்றோய் சரணம்
யாவரும் போற்றும் நல்லோய் சரணம்
மாதவக் கண்ணன் மகிழ்வே சரணம்
மாண்புறு யாதவ குலத்தோய் சரணம்
யாதவ குலம்வளர் நாயக சரணம்
நல்லறம் போற்றும் ஞானி சரணம்
போதனை புரிந்த புண்ணியா சரணம்
பழனிச் சாமிப் பதமலர் சரணம்!

8. அருளொளி கூட்டும் அருளே சரணம்
அனைத்து யாதவ ஆசான் சரணம்
வருவினை போக்கும் வடிவே சரணம்
வல்லமை கூட்டும் வலிவே சரணம்
இருள்மனம் அகற்றும் இனியோய் சரணம்
இன்னுயிர் காக்கும் இயல்பே சரணம்
திருவருள் கூட்டும் தெளிவே சரணம்
திவ்விய நாச்சி முத்தே சரணம்!

9. கிருஷ்ணன் கோவில் கீர்த்தி சரணம்
கேடில் ஞானக் கொழுந்தே சரணம்
முருகன் அடிதொழு முத்தே சரணம்
முக்தி நிலைபெறு முகிலே சரணம்
அருளை வழங்கும் ஆசான் சரணம்
ஆன்ம ஒளிதரு அருளே சரணம்
மருளை நீக்கும் மதியே சரணம்
மாண்புறு பழனிச் சாமி சரணம்!

10. ஞானம் உணர்த்தும் நாயக சரணம்
நலிவு போக்கும் நடமே சரணம்
ஈனம் அழிக்கும் இறையே சரணம்
ஈடில் புகழுறு எழிலே சரணம்
தானம் வழங்கு தலைவா சரணம்
தளரா மனத்துடை தகையே சரணம்
மோன நிலையுறு மூர்த்தி சரணம்
மூவா நாச்சி முத்தே சரணம் !

11. கருப்ப சாமி நேசா சரணம்
கருணை மழைபொழி கருணா சரணம்
காரிருள் போக்கும் கதிரோய் சரணம்
கண்ணனைப் பிரதிஷ்டை செய்தோய் சரணம்
விரும்பி நலம் தரு விமலா சரணம்
வேத முணர்ந்த வித்தக சரணம்
அரும்பு முல்லை அழகே சரணம்
ஐயா நாச்சி முத்தே சரணம் !

12 ஜீவ முக்தி அடைந்தாய் சரணம்
சிறந்த ஞானக் கீர்த்தி சரணம்
பாவ வினைகள் போக்குவோய் சரணம்
பாலக் காட்டு அரசே சரணம்
மேவு புகழுறு மேதா சரணம்
மெய்மை குன்றா ஞானி சரணம்
நேம நிஷ்டை செய்தாய் சரணம்
நாச்சி முத்து நல்லோய் சரணம் !

3. காவியுடை கட்டியருள் புரிந்தாய் சரணம்
களங்கமிலா வாழ்வுபெற வைப்போய் சரணம்
கூவியிசை பாடுகின்ற குயிலே சரணம்
கொஞ்சுதமிழ்ப் பாகிகர்த்த கோவே சரணம்
தூவிமலர் இறைவனடி சொரிந்தோய் சரணம்
தூமறையின் பொருளனைய பொருளே சரணம்
ஆவியினைக் கண்ணனொடு லயித்தோய் சரணம்
ஆனந்த நாச்சிமுத்து ஐயா சரணம் !

4. நாச்சி முத்து நற்றவ ஞானி
நலியா, குலையா நல்லுடல் மேனி !
பேச்சில் கவனம் கொள்ளா ஞானப்
பேற்றில் திளைத்த பேரருள் தோணி !
மூச்சில் முழிக்கும் முத்தே சரணம்
மோன வடிவே மூர்த்தி சரணம்
நாச்சி முத்தெனும் பழனிச் சாமி
நாடினேன் அருள்வாய்; சரணம், சரணம்!

- அதலை இராமன்

முற்றும்

சிறந்த வாழ்வு நல்குவாயே !

சிவநாரா யணனென்னும் பெயரும் பூண்டே
சீரோங்கு பாலக்காட் டில்பி றந்தீர்;
தவமோங்கு மெய்ஞ்ஞான உந்த லாலே
தவித்தேகி அங்கிருந்து பழனி வந்தீர்;
சிவபாலன் முருகனவன் அருளி னாலே
சிறப்புறவே யாதவர்க்கு மடம மைத்தீர்;
நவநீதக் கிருஷ்ணனுக்கோ மதுரை தன்னில்
நல்லதொரு கோவிலையும் அமைத்துத் தந்தீர்!
கடவுளென நின்னுருவை உளம்ப தித்தே
கனிவுடனே தொழுதேத்திப் போற்றுகின்ற
வடக்கு மாசி வீதியுறை ஆய ரெல்லாம்
வாஞ்சையுடன் நின்மடத்தைப் பழுது பார்த்துத்
திடமுடனே கும்பாபி ஷேகம் செய்தோம்;
தீர்க்கதரி சனமோங்கு நாச்சி முத்தே!
தடுமாற்ற மில்லாத சிறந்த வாழ்வும்
தக்கசெல்வம் நீளாயுள் நல்கு வாயே !

இவண்,

யாதவ குல மக்கள்
வடக்கு மாசி வீதி,
மதுரை - 1.

அன்பளிப்பாளர்கள் :

K. ஆறுமுகம்

M.D.C.C. பேங்க் (H.O)

A. ரெங்கநாதன்

N. தனபாலன்

சைக்கிள் மெக்கானிக்

வடக்கு மாசி வீதி, மதுரை.

ஸ்ரீ விஜயலெட்சுமி பிரிண்டர்ஸ் MDU ✆ 621653


ஸ்ரீலஸ்ரீசத்குரு பழனி
நாச்சிமுத்து சிவநாராயண தேசிகர் சுவாமி

உ

ஸ்ரீ ராமஜெயம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சற்குரு பழனி
நாச்சிமுத்து சிவ நாராயண தேசிக சுவாமிகள் மடம்

கும்பாபிஷேக அழைப்பு

அன்புடையீர்!

மதுரை வடக்குமாசி வீதி இராமாயணச் சாவடி ஆயிரம் வீட்டு யாதவர்கள் உறவின்முறைக்கு பாத்தியமான ஸ்ரீ ராமசாமி — ஸ்ரீ நவநீத கிருஷ்ண சுவாமி தேவஸ்தானத்தைச் சேர்ந்த மதுரையம்பதியின் மேற்குத் திசையில் ஆலவாய் அண்ணலின் திருவிளையாடலில் ஒன்றான பிட்டுக்கு மண் சுமந்து லீலை புரிந்த புட்டுத் தோப்பில் கோவில் கொண்டுள்ள

ஸ்ரீ-ல-ஸ்ரீ சற்குரு பழனி நாச்சிமுத்து சிவ நாராயண தேசிக சுவாமிகள்

எழுந்தருளியுள்ள புட்டுத்தோப்பு நாச்சிமுத்து பழனிச்சுவாமி மடத்தில் உள்ள மண்டபங்களின் திருப்பணிகள் அனைத்தும் நடந்து முடிந்ததை முன்னிட்டு

நிகழும் மங்களகரமான ஈஸ்வர வருடம் தை மாதம் 19ம் தேதி (1-2-1998) ஞாயிற்றுக்கிழமை பூர்வ பட்ச பஞ்சமித் திதியும் உத்திரட்டாதி நட்சத்திரமும் அமிர்தயோகமும் புதன் காலஹோரையும் கூடிய காலை 8-10 மணியிலிருந்து 9-00 மணிக்குள் கும்ப லக்னத்தில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

மதுரை வடக்குமாசி வீதி இராமாயணச் சாவடி ஆயிரம் வீட்டு யாதவர்களைச் சேர்ந்த ஆட்டு வியாபாரிகள் மகிமைக் கட்டளையால் மகா கும்பாபிஷேகம் நடைபெறும் அதைத் தொடர்ந்து மஹா அபிஷேகமும், தீபாராதனைகளும் நடைபெறும்.

பக்த கோடிகளும், மெய்யன்பர்களும் அவர்பால் பற்றுக் கொண்ட கிராமத்தார்களும் மற்றும் ஆர்வமுள்ள அனைவரும் வந்து கும்பாபிஷேகத்தை கண்டு களித்து குருநாதரின் அருளையும் ஆசியையும் பெற்று உய்ய வேண்டுகிறோம்.

இப்படிக்கு

மா. வ. சுப்பிரமணியக் கோனார்,
டிரஸ்டி. மதுரை வடக்குமாசி வீதி,
இராமாயணச் சாவடி, ஆயிரம் வீட்டு
யாதவர்களின் ஆட்டு
வியாபாரிகள் மகிமைக்கட்டளை.
28, ஒர்க்ஷாப் ரோடு, சிம்மக்கல்,
மதுரை

A. V. M. வீரணக் கோனார்,
(கோர்ட் ரிசீவர்)
ஸ்ரீ ராமசாமி ஸ்ரீ நவநீத
கிருஷ்ண சுவாமி
தேவஸ்தானம்.
316, வடக்குமாசி வீதி.
மதுரை.

உ

குருவே துணை

ஸ்ரீலஸ்ரீ சற்குரு பழநி நாச்சிமுத்து சிவ நாராயண தேசிக சுவாமிகள்

குரு பூஜை பெருவிழா அழைப்பிதழ்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

அன்புடையீர்,

மனிதப் பிறவியின் நோக்கம் பிறவா பெருநிலை அடைவது. இப்பெரு நிலையை அடைய ஜீவர்களைப் பக்குவப் படுத்தவும், பக்குவப்பட்ட ஜீவர்களை முக்திகரை சேர்க்கவும் அகண்ட பரிபூரண சச்சிதானந்தமாகிய பரம்பொருள் குருவுரு தாங்கி இப்பூவுலகில் அவதரிக்கின்றது. இங்ஙனம் வாழையடி வாழையென வந்த மகான்களின் திருக்கூட்ட மரபில் ஒருவராக வந்து அவதரித்தவரும், மதுரை புட்டுத் தோப்பு பகுதியில் ஜீவசமாதி கொண்டு அருள்புரிந்து வருபவருமான **ஸ்ரீலஸ்ரீ நாச்சிமுத்து சிவநாராயண தேசிக சுவாமிகள் என்ற பழநி சுவாமிகள்** அவர்களின் வருடாந்திர குருபூஜை பெருவிழா வரும் சர்வஜித் வருடம் சித்திரை மாதம் 16-ம் நாள் (29-04-2007) ஞாயிற்றுக்கிழமை அன்று ஜீவசமாதி தலமான புட்டுத் தோப்பு ஸ்ரீ பழநிசுவாமி மடத்தில் சிறப்பாக நடைபெறும்.

அச்சமயம் யாக யக்ஞங்களும், அபிஷேக அலங்காரங்களுடன் மஹேச்வர பூஜையும் அன்னதானமும் நடைபெற இருப்பதால், ஆன்மநேய செல்வர்கள் யாவரும் இவ்விழாவில் கலந்து கொண்டு திருவருளும் குருவருளும் பெற்று உய்வடைய வேண்டிக்கொள்கிறோம்.

இங்ஙனம்,

A.V.M. வீரணக்கோனார்,

ரிசீவர்

ஆயிரம் வீட்டு யாதவர்களுக்கு சொந்தமான
ஸ்ரீ ராமசுவாமி, ஸ்ரீ நவநீத கிருஷ்ண சுவாமி தேவஸ்தானம்,
வடக்குமாசி வீதி, மதுரை.

உ

குருவே துணை

ஸ்ரீலஸ்ரீ சற்குரு பழநி நாச்சிமுத்து சிவ நாராயண தேசிக சுவாமிகள்

குரு பூஜை பெருவிழா அழைப்பிதழ்



உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

நாள் : **29-04-2007** ஞாயிற்றுக்கிழமை

உ
ஸ்ரீ ராமஜெயம்
ஸ்ரீ லஸ்ரீ சத்குரு பழனி நாச்சிமுத்து
சிவநாராயண தேசிக சுவாமிகள்
யட கும்பாபிஷேகப்பிரசாதம

ஸ்ரீ ராமஜெயம்
ஈஸ்வர ஆண்டு தை மாதம் 19ம் தேதி
(1-2-1998) ஞாயிற்றுக்கிழமை
புட்டுத் தோப்பு, மதுரை.
விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும்
நன்றி !
மா.வ.சுப்பிரமணியக்கோனார் டிரஸ்டி
சாவடி ஆயிரம் வீட்டு யாதவ ஆட்டு
வியாபாரிகள் மகிமை கட்டளை

Srilasri Satguru Palani NatchiMuthu SivaNarayana Desikar varalaru

Book created by

Shribalasubiksham Ramasubramanian

sivanarayanadesikar

நம்மாழ்வார் திருவாய்மொழி

கண்ணன் கழலினை
நன்னும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே!

ஸ்ரீ பாலசுபிக்ஷம்

இராமசுப்பிரமணியன்